மற்றப் பிள்ளைகள் சும்மா இருந்து விடுவார்களா? ‘வலிச்ச, மோரையும் சுறிச்சுப்போம்– வண்ணாந்துறையும் வெளுத்துப்போம் என்று வேறொரு ‘கோரஸ்’ எடுப்பார்கள். அப்புறம் வள்ளியம்மை அழுதுகொண்டு போக வேண்டியதுதான்!

அப்படி அவள் அழுதபடி தன் இடம்தேடிப் போகின்றபோதுதான் அவளுக்கு அந்தப் பெயரை வைத்தவர்கள் மீது கோபம் கோபமாக வரும். கோபமெல்லாம் கொஞ்ச நேரத்துக்கே. பிறகு அதே பெயர் அழகானதாக, இனியதாகத் தோன்றும்.



அந்தச் சின்னஞ்சிறு உள்ளத்துக்கு– களங்கமற்ற பெருவிழிகளுக்கு எல்லாமே இனிமைகள் தான்; எல்லாம் அற்புதமே.

அனைத்திலும் மேலான வேடிக்கை ஒன்று உண்டு.



ஒரு மணிக்கு ஒரு தடவை டவுண் பஸ் அந்த வழியாக வரும். கால் மணிநேரம் கழித்துத் திரும்பிப் போகும். அப்படி வருகிறபோதும், போகிறபோதும் பஸ்ஸினுள் இருப்பவர்களைப் பார்ப்பதில் வள்ளிஅம்மை அலுப்படைவதே இல்லை. அவள் உள்ளத்தில் ஒரு ஆசை.



“தினந்தோறும் எத்தனையோ தடவை கார் வந்து போகுதே. அதில் ஒரு தடவை கூடப்போக முடியலியே. என்றாவது ஒரு நாள் நானும் பஸ்ஸில் ஏறி, அது போற இடத்துக்கெல்லாம் போவேன். ஆமா. போகத்தான் வேணும்” இப்படி ஆசைப்பட்டாள் வள்ளி.



“எது எப்படியோ– எனக்குத் தெரியாது. நான் டவுனுக்குப் போகணும். இந்தா காசு”

“சரி சரி முதல்லே ஏறு” என்று கூறிய கண்டக்டர், அவள் பக்கம் கைநீட்டி, அவளைப் பஸ்ஸுக்குள் தூக்கி வைத்தான்.

“நான்தான் ஏறி வாறேனே. அதுக்குள்ளே நீ ஏன் அவசரப்படுறே?” என்று வள்ளிஅம்மை மூஞ்சியைச் சுளித்தாள்.

எல்லாரும் வழிவிடுங்க ஸார், பெரிய மனுஷி வாறாங்க” என்றான்.

கண்டக்டர் கொஞ்சம் தமாஷ் பேர்வழி. “கோவிச்சுக்காதிங்க மேடம். ஸீட்லே உட்காருங்க.....

